# அரையாண்டுத் தேர்வு – 2023

வகுப்பு : 12
நேரம் : 3.00 மணி

## பொதுத்தமிழ்

பதிவுஎண்
மதிப்பெண்கள்: 90

### பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 14×1=14

1. படத்திற்குப்பொருத்தமானதிருக்குறளைக்கண்டுபிடிக்க.



அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.
ஆ) வையத்துள்வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.
இ) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும்.
ஈ) நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் பகையும்உளவோபிற.

2. "இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக" என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது
அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவைஅனைத்தும்

3. பிழையான தொடரைக் கண்டறிக.
அ) காளைகளைப்பூட்டி வயலை உழுதனர்.
ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
இ) காலையில் பூத்த மல்லிகை மணம் வீசியது
ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின

4. 'விளியறி ஞமலி'– இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
அ) எருது ஆ) நாய் இ) குதிரை ஈ) யானை

5. பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளைப் பாடியவர் ________.
அ) நம்பியாண்டார் நம்பி ஆ) நாவுக்கரசர்
இ) சுந்தரர் ஈ) திருஞானசம்பந்தர்

6. "நான் வெற்றுவெளியில் அலைந்து கொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி" என்று சுகந்திசுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது
அ) தமது வீட்டு முகவரியை ஆ) தமது குடும்பத்தை
இ) தமது அடையாளத்தை ஈ) தமது படைப்புகளை

7. பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
அ) செங்கடல் ஆ) தாழ்கடல் இ) விரிகடல் ஈ) கத்துகடல்

8. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) கோடைமழை | – | 1) உத்தமசோழன் |
| ஆ) சிதம்பரநினைவுகள் | – | 2) பூமணி |
| இ) முதல்கல் | – | 3) சாந்தாதத் |
| ஈ) அஞ்ஞாடி | – | 4) பாலச்சந்திரன்சுள்ளிக்காடு |
| | – | 5) கே.வி.சைலஜா |

அ) 3, 1, 4, 5 ஆ) 3, 4, 1, 2 இ) 3, 4, 2, 1 ஈ) 3, 5, 1, 2



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

9. 'உவமைக் கவிஞர்' என்று சிறப்பிக்கப்படுபவர் ________
அ)பாரதியார் ஆ)சுரதா இ) நகுலன் ஈ) கிருட்டிணனார்

10. "உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ.
பற! பற! – மேலே! மேலே! மேலே!"– என்ற இக்கூற்றுக்குரியவரைத் தேர்க.
அ) சுகந்திசுப்பிரமணியன் ஆ) நகுலன் இ) பாரதியார் ஈ) தமிழ்நதி

11. அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது
அ) நம்பிக்கை ஆ) பெருமிதம் இ) புகழ் ஈ) அச்சம்

12. சிலப்பதிகாரம் குறிப்பிடும் இசைக்கருவிகள் ஒலித்த முறை –முறையே
அ) குழல், தண்ணுமை, யாழ், முழவு, ஆமந்திரிகை.
ஆ) குழல், யாழ், முழவு, தண்ணுமை, ஆமந்திரிகை.
இ) குழல், முழவு, யாழ், தண்ணுமை, ஆமந்திரிகை.
ஈ) குழல், யாழ், தண்ணுமை, முழவு, ஆமந்திரிகை.

13. மெய்ப்பாட்டியல் இடம்பெற்றுள்ள நூல் ________
அ) செயிற்றியம் ஆ) தொல்காப்பியம்
இ) நன்னூல் ஈ) புறப்பொருள் வெண்பாமாலை

14. தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.
அ) தொன்மம் என்றால் பழங்கதை, புராணம் என்றெல்லாம் பொருள் உள்ளது.
ஆ) கவிதையில் பழங்கதையைத் துணையாகக் கொண்டு ஒரு கருத்தை விளக்குவது.
இ) தொன்மத்தை வெளிப்படுத்தும் முதன்மையான கருவியாகக் கட்டுரை விளங்குகிறது.
ஈ) காலம்காலமாக உருவாக்கப்பட்டு இறுகிவிட்ட கருத்து வடிவங்கள்.

## பகுதி– II

### பிரிவு –1

3×2=6

எவையேனும் **மூன்றனுக்கு** விடைதருக.

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
16. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.
17. செவ்வியல் இலக்கிய மரபு பாடாத அல்லது புறக்கணித்த கருப்பொருள்களை எல்லாம் பாடு பொருளாக்கிய நூல்கள் இரண்டினை எழுதுக.
18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

### பிரிவு – 2

2×2=4

எவையேனும் **இரண்டனுக்கு** விடைதருக.

19. பண்டைய காலத்துக் கல்வி முறையில் மனனப்பயிற்சிக்கு உதவிய நூல்களைக் குறிப்பிடுக.
20. 'தமிழர் வளர்த்த அழகு கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.
21. 'குலஷோவ் விளைவு' என்றால் என்ன?

### பிரிவு – 3

7×2=14

எவையேனும் **ஏழனுக்கு** விடை தருக.

22. ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?
23. கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
(அ) அவன் வெண்மதியிடம் பேசினாய்.
(ஆ) ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது.
24. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.
புல், புள்
25. விடைக்கேற்ற வினா அமைக்க.
குடும்பம் என்ற சொல் முதன் முதலில் திருக்குறளில்தான் இடம் பெற்றுள்ளது.
26. தொடரில் உள்ள மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக.
வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

27. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
(அ) பலகை (ஆ) வெங்காயம்
28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
(அ) அறிந்து (ஆ) செய்த
29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சிவிதி தருக.
(அ) எத்திசை (ஆ) முன்னுடை
30. கலைச்சொல்லாக்கம் தருக. (அ) Myth (ஆ) Lobby
குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.
குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிக்க.
(அம்பை, கோதை, தமிழ்ஒளி, கவிமணி)
அ) கவிஞர்; ஈற்றிருசொல்லால்அணிகலன்செய்யலாம்________
ஆ) முன்னெழுத்துஅரசன்; பின்னெழுத்துதமிழ்மாதம் ________

## பகுதி– III

### பிரிவு –1

எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. 2×4=8

31. 'ஏங்கொலி நீர் ஞாலத்(து) இருளகற்றும்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. நீங்கள் படித்ததில் பிடித்த குறட்பாக்கள் இரண்டினை எழுதி, காரணத்தைக் குறிப்பிடவும்.
33. தலைக்கோல் – குறிப்பு எழுதுக.
34. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

### பிரிவு– 2

**எவையேனும் இரண்டனுக்கு விடைதருக.** 2×4=8

35. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
36. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – விளக்குக.
37. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
38. நேர மேலாண்மைக்குப் பொருத்தமான கதை ஒன்றினை எழுதுக.

### பிரிவு– 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×4=12

39. (அ) உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.
**(அல்லது)**
(ஆ) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.
40. (அ) வாகைத் திணையைச் சான்றுடன் விளக்குக.
**(அல்லது)**
(ஆ) செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்குக.
41. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே

– திரிகூட ராசப்பக்கவிராயர்

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக

(அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

(அல்லது)

(ஆ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

43. கருத்துப்படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக

சங்க இலக்கியங்கள்

எட்டுத்தொகை

| அகம் | புறம் | அகமும் புறமும் |
|---|---|---|
| நற்றிணை | புறநானூறு | பரிபாடல் |
| குறுந்தொகை | பதிற்றுப்பத்து | |
| ஐங்குறுநூறு | | |
| அகநானூறு | | |
| கலித்தொகை | | |
| | | |

பத்துப்பாட்டு

| அகம் | புறம் |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு | மதுரைக்காஞ்சி |
| முல்லைப்பாட்டு | திருமுருகாற்றுப்படை |
| நெடுநல்வாடை | பொருநராற்றுப்படை |
| பட்டினப்பாலை | பெரும்பாணாற்றுப்படை |
| | சிறுபாணாற்றுப்படை |
| | கூத்தராற்றுப்படை |

## பகுதி – IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 3×6=18

44. (அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக. **(அல்லது)**

(ஆ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. (அ) கவிதையின் நடையைக்கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக. **(அல்லது)**

(ஆ) 'சென்னை அறிவின் நகரம்' – இக்கூற்றை மெய்ப்பிக்க.

46. (அ) புகளூர்க் கல்வெட்டு, சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள எவ்வகையில் துணைபுரிகிறது? – விளக்குக.

**(அல்லது)**

(ஆ) 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' – இக்கூற்று நனவாக நாம் செய்யவேண்டியன யாவை?

## பகுதி – V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** 4+2=6

(அ) 'ஒருமையுடன்................' எனத் தொடங்கும் தெய்வமணிமாலை, பாடலை எழுதுக.

(ആ) 'நோய்' என முடியும் குறளை எழுதுக.

************



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com